# அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர நிர்ணயக் குழுவால் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில் ''யூ'' தரம் பெற்றது)

## காரைக்குடி

நாள்: 01.08.2018

**<u>அழகப்பா பல்கலைக்கழகத்தில் ''ஸ்வயம்''இணைய வழிக்கல்வி</u>**

''ஸ்வயம்'' இணைய வழிக்கல்வியானது இந்திய அரசால் வடிவமைக்கப்பட்டு அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் வாயிலாக கல்வி கற்கும் முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது.

இது குறித்து பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா.நா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது:

இந்த இணைய வழிக்கல்வியானது மாணவர்கள் தற்போதுள்ள பாடத்திட்டத்தினை வாயிலாக அந்தந்த பாடங்களை ஸ்வயம் இணையதளத்தின் வாயிலாக தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

பல்கலைக்கழக மானியக்குழு (UGC) –யின் வழிகாட்டுதலின்படி, பல்கலைக்கழக மாணவர்கள் அவர்களின் விருப்பத்திற்கேற்றவாறு பாடங்களை தேர்வு செய்யலாம். இந்த பாடங்கள் அவர்களுடைய சுய கற்றலுக்காகவோ அல்லது மதிப்பெண் மாற்றமாக (Credit Transfer)-வோ இருக்கலாம்.

''ஸ்வயம்'' வாயிலாக ஏராளமாக தரமான வீடியோ பாடங்களை இந்தியாவிலுள்ள பெருமைவாய்ந்த கல்வி நிறுவனங்களில் உள்ள பேராசிரியர்கள் மற்றும் கல்வியாளர்களை கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

''ஸ்வயம்'' இணைய வழிக்கல்வியினை ஒவ்வொரு மாணவனும் வழக்கமான பாடத்தினை தவிர ஸ்வயம் வீடியோ அளிக்கக்கூடிய தரமான பாடத்திட்டத்தில் வழங்கப்படுகின்ற பாடத்தினை ஒவ்வொரு மாணவரும் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றார்.

அழகப்பா பல்கலைக்கழகத்திலுள்ள பல்வேறு துறைகளின் ஸ்வயம் ஒருங்கிணைப்பாளர்களுக்கான கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஸ்வயம் தொடர்பான ஆலோசனைகளும், அதனுடைய காரணிகள் மற்றும் கருத்துக்கள் குறித்த விபரங்கள் ஒருங்கிணைப்பாளர்களுக்கு வழங்கப்பட்டது என்றார்.

மேலும் அவர் கூறுகையில், அழகப்பா பல்கலைக்கழகம் ''ஸ்வயம்''இணைய வழிக் கல்வி வழங்குவதில் முன்னோடியாக திகழ்கின்றது. இப்பல்கலைக்கழகத்தில் கடந்த கல்வியாண்டில் 1151 மாணவர்கள் ஸ்வயம் இணைய வழிக் கல்வியை தேர்வு செய்துள்ளனர். அந்த பாடங்கள் அனைத்தும் பல்கலைக்கழக கல்விக் குழுவில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ''ஸ்வயம்'' பற்றிய விழிப்புணர்வை புதிதாக பல்கலைக்கழகத்தில் சேர்ந்துள்ள முதலாமாண்டு மாணவர்களுக்கு வழங்கவும், ''ஸ்வயம்''பற்றிய ஆர்வத்தினை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளபட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

பேரா.ஹா.குருமல்லேஷ் பிரபு

பதிவாளர்